# மன்னார்குடி நகராட்சி

# சாதாரணக்கூட்டம்

நிகழும் விகாரி வருடம் பஙகுனி மாதம் – 18ம் தேதி (2020 ம் வருடம் மார்ச் – 31ந் தேதி) செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## பொருள்கள்

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் பிப்ரவரி – 2020 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | தீர்மான எண்.1042 பதியப்பட்டது. |
| பொருள் எண்.2 | நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களின் பிப்ரவரி – 2020 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.1043 பதியப்பட்டது. |
| பொருள் எண்.3 | மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிவறைகள் மற்றும் காந்திஜி காய்கனி நாளஙகாடி உரிம இனஙகள் ஆகியவற்றினை துறை மூலம் வசூல் செய்ய ஏதுவாக ரசீது புத்தகஙகளை அச்சடிக்க விலைப்புள்ளி கோருவதற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 24.03.2020ல் பெறப்பட்டுள்ளது. அதன்படி ரசீது புத்தகஙகள் அச்சடித்து வழஙக அச்சகஙகளுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் 27.03.2020 அன்று கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | தீர்மான எண்.1044 அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | விலைப்புள்ளி வழஙகிய அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி | 225 புத்தகத்திற்கான எண்ணிக்கைக்கான தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | ராஜாமணி ஆப்செட்ஸ், மன்னார்குடி | ரூ.20,800/– |
| 2. | ஸ்ரீராம் அச்சகம், மன்னார்குடி | ரூ.5,000/– |
| 3. | சாமி பிரிண்டர்ஸ், மன்னார்குடி | ரூ.3,750/– |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சாமி பிரிண்டர்ஸ், மன்னார்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.8204/2017/அ4 | |
| பொருள் எண்.4 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN51 X1368 குடிநீர் வாகத்திற்கு தகுதிச்சான்று 2020 உடன் முடிவடைவதால், மேற்படி வாகனத்தினை பராமரிப்பு செய்து மற்றும் பழுதுகள் நீக்கி, புதுப்பித்து தகுதி சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.1045 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையிலான பகுதிகளில் விடுபட்ட இடஙகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழஙகிடவும், சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்திடவும், மேலும் சிறு மற்றும் நடுத்தர நகரஙகளுக்கான நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ் தவணை முறையில் வைப்புத்தொகை செலுத்தி குடிநீர் குழாய் இணைப்புகள் பெற ஏதுவாக பகிர்மான குழாய்கள் பதித்திடவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1226/2020/இ1) | தீர்மான எண்.1046 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.6 | இந்நகராட்சிக்குட்பட்ட 10 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள திரவ குளோரினேசன் மோட்டார் மற்றும் உதிரி பாகஙகள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளவும், முற்றிலும் பழுதான திரவ குளோரினேசன் மோட்டார்களுக்கு பதிலாக புதிய மோட்டார்கள் கொள்முதல் செய்து பொருத்திடவும் தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.1047 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1226/2020/இ1) | |
| பொருள் எண்.7 | இந்நகராட்சி பொது பிரிவில் உள்ள நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்யும் பணிக்கு 18.03.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.1048 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | நிறுவனம் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | M/s Aqua Pure RO System,<br>50/61, நியூ பை பாஸ் ரோடு, மன்னார்குடி. | 2,800 /– |
| 2. | M/s Day Night Marketing,<br>ருக்மணிபாளையம் ரோடு, மன்னார்குடி. | 3,000 /– |
| 3. | M/s Aqua sure RO System,<br>பழைய தஞ்சாவூர், மன்னார்குடி. | 3,200/– |

அலுவலக குறிப்பு:
1. மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் காணும் M/s Aqua Pure RO System, மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மிக குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பொருள் எண்.8 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.1049 அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | சூ. மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டிற்கு சமம் |

<table>
<tr>
<td></td>
<td>

| | | |
|---|---|---|
| 2. | ளு. முத்துக்குமரன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.27 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.1421/2020/இ1)

</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.9</td>
<td>

இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகளுக்கு தொழில்நுட்ப பணியாளரால் மதிப்பீடு தயார் செய்யும் பணிக்கு 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | N. மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டிற்கு சமம் |
| 2. | S. முத்துக்குமரன்<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.21 % அதிகம் |

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.1422/2020/இ1)

</td>
<td>தீர்மான எண்.1050 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்.10</td>
<td>
இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN51 X1368 குடிநீர் வாகனத்தினை பராமரிப்பு செய்து மற்றும் பழுதுகள் நீக்கி, புதுப்பித்து தகுதி சான்று பெறும் பணிக்கு 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு ஜி. தமிழ்செல்வன்,<br>ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>நடுவாணியத்தெரு,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.53 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு ஜி. கிருஷ்ண குமார்,<br>கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.59 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.739/2020/இ1)
</td>
<td>தீர்மான எண்.1051<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.11</td>
<td>
இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் டிஎன் 50 யூ 1293 டிப்பர் லாரி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு ஏதுவாக பழுதுகள் சரி செய்து நீக்கிட உத்தேச செலவினம் ரூ.1,28,000/—க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது. தற்பொழுது மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற்றிட வட்டார போக்குவரத்து அலுவலகத்திடம் ஆய்வுக்குட்படுத்தும்போது வாகனத்திற்கு வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்திட தெரிவிக்கப்பட்டதன் பேரில் புதிதாக வேக கட்டுப்பாட்டு கருவி ரூ.6,500/—க்குள் கொள்முதல் செய்து பொருத்திக்கொள்ள கூடுதல் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
2. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டதற்கும் அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.<br>
(ந.க.எண்.3465/2019/எச்1)
</td>
<td>தீர்மான எண்.1052<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்.12</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரனா நோய் தொற்று தடுப்பு பணிகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழி காட்டி சுற்றறிக்கை ந.க.எண்.5437/ஜே1/2020 நாள்.09.03.2020 அறிவுறுத்தப்பட்டது.<br><br>மேலும் மேற்படி கொரோனா நோய் தொற்று தீவிர தடுப்பு பணிக்காக பொது சுகாதாரப் பிரிவிற்கு கீழ்வரும் விபரப்படிக்கான கிருமி நாசினிகள் பொருள்கள் வாங்கி பயன்படுத்திட அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதாரப்பிரிவின் அவசரம் அவசியம் கருதி தளவாட பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருட்களின் விபரம்</th><th>தேவைப்படும் அளவு</th></tr>
<tr><td>1.</td><td>நீர்த்த சுண்ணாம்பு</td><td>15000 கி.கி.</td></tr>
<tr><td>2.</td><td>பிளிச்சிங பவுடர்</td><td>500 கி.கி.</td></tr>
<tr><td>3.</td><td>பினாயில்</td><td>100 லிட்டர்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: அ) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு மல்ட்டி பர்பஸ் நிறுவனம் திருச்சிக்கு வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண்.1470/2020/எச்1)</td><td>தீர்மான எண்.1053 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்.13</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரனா நோய் தொற்று தடுப்பு பணிகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழி காட்டி சுற்றறிக்கை ந.க.எண்.5437/ஜே1/2020 நாள்.09.03.2020 அறிவுறுத்தப்பட்டது.<br>மேலும் மேற்படி கொரோனா நோய் தொற்று தீவிர தடுப்பு பணிக்காக பொது சுகாதாரப் பிரிவிற்கு கீழ்வரும் விபரப்படிக்கான கிருமி நாசினிகள் பொருள்கள் வாங்கி பயன்படுத்திட அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதாரப்பிரிவின் அவசரம் அவசியம் கருதி தளவாட பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,00,000/– மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருட்களின் விபரம்</th><th>தேவைப்படும் அளவு</th></tr>
</table></td><td>தீர்மான எண்.1054 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 1. | லைசால் திரவம் | 200 லிட்டர் |
| 2. | ஹேண்ட் சாணிட்ரைஸர் | 20 லிட்டர் |
| 3. | முகவுரை | 300 எண்கள் |
| 4. | கையுரை | 300 எண்கள் |
| 5. | முழு உரை (ஏப்ரான்) | 10 எண்கள் |
| 6. | பிளாஸ்டிக் ஸ்பிரேயர் | 5 எண்கள் |
| 7. | விழிப்புணர்வு நோட்டீஸ் | 10000 எண்கள் |
| 8. | சென்ஜார் தர்மாமீட்டர் | 5 எண்கள் |
| 9. | அலுமினிய வாளி | 10 எண்கள் |
| 10. | மோஃபு | 20 எண்கள் |

அலுவலக குறிப்பு: அ) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு மல்ட்டி பர்பஸ் நிறுவனம் திருச்சிக்கு வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1469/2020/எச்1)**

பொருள் எண்.14

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்கண்ட விவரப்படி உள்ள வாகனஙகளுக்கு வருப் **31.03.2020**க்குள் சாலை வரி மற்றும் பசுமை வரி உரிமம் காலம் முடிவடைவதால், **2020–2021** ஆம் ஆண்டிற்கு மீள உரிமப் புதுப்பித்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம் **ரூ.25232/–** மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வாகனம் எண். | வாகன விவரம் | சாலை வரித் தொகை ரூ. | பசுமை வரி தொகை (1%) ரூ. | கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | TN50U1279 | டிப்பர் லாரி | 3800 | 38 | 3838 |
| 2. | TN50U1293 | டிப்பர் லாரி | 3800 | 38 | 3838 |
| 3. | TN50U2836 | டம்பர் பிளேசர் | 3800 | 38 | 3838 |
| 4. | TN50U2866 | கழிவுநீர் ஊர்தி | 3800 | 38 | 3838 |
| 5. | TN50U9435 | காம்பாக்டர் | 5750 | 60 | 5810 |
| 6. | TN50X6545 | டிராக்டர் | 220 | 10 | 230 |
| 7. | TN50X6541 | டிரைலர் | 800 | 10 | 810 |
| 8. | TN50X1368 | குடிநீர் ஊர்தி | 3000 | 30 | 3030 |
| | | **கூடுதல்** | **24970** | **262** | **25232** |

தீர்மான எண்.1055
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று சாலை வரி செலுத்தி உரிமம் புதுப்பித்திட செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண்.1532/2020/எச்1)** | |
| பொருள் எண்.15 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகர் பகுதிகளில் வார்டுகளில் உள்ள தெருக்களில் வீடுவீடாக குப்பைகள் சேகரித்தல், இனம் பிரித்தல், சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லுதல் மற்றும் கழிவு நீர் கால்வாய்களை பராமரித்தல் உள்ளிட்ட அனைத்து விதமான பணிகளையும் செய்திட தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 114 நபர்கள் மற்றும் ஓட்டுநர்கள் வழங்கிட ஸ்ரீமாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன், மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>இந்நிலையில் இப்பணியினை தொடர்ந்து செய்து வரும் ஸ்ரீமாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனம் மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடியும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர், திருவாரூர் அவர்களின் 2019–20ம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள தினக்கூலி விகிதத்தில் பட்டியல் வழங்க கோரி 31.03.2020 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது.<br><br>மேலும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சங்கத்தின் வாயிலாக (CITU) திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களினால் 2019–2020ம் ஆண்டில் உயர்த்தப்பட்ட தினக்கூலி அடிப்படையில் கூலி வழங்கிட கோரி பல்வேறு தேதியிட்ட விண்ணப்பங்கள் மற்றும் போராட்டங்கள் வாயிலாக நகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர் திருவாரூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.<br><br>எனவே தற்போது உள்ள கொரோனா தீவிர நோய் தொற்று தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருவதாலும் தேசிய பேரிடர் என அரசு அறிவித்துள்ளதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதி ஸ்ரீமாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட புதிய தினக்கூலி அடிப்படையில் பட்டியல் வழங்கலாம் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அ) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>ஆ) பொது சுகாதாரப் பணியில் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் அவர்களினால் 2019–2020ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட | தீர்மான எண்.1056<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>தினக்கூலி அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஸ்ரீமாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழஙகலாம்.<br><br>(ந.க.எண்.258/2015/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.16</td>
<td>தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன்கீழ் இலகுரக வாகனம் 5 எண்ணிக்கையில் வாஙகுதல் (Light commercial Vehicle) பணிக்கு 18.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s Lakshmi Auto Diesel Works,<br>4, Workshop Corner,<br>Mettur Dam – 636 401</td><td>மதிப்பீட்டை விட 4.96 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>M/s J.V.K. Auto Diesel Works,<br>Kalarampatt Main Road,<br>Salem – 636 015</td><td>மதிப்பீட்டை விட 5.21 % அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு:<br>
1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.96% அதிகமாகவும் ஒப்பந்த விதிகளின்படி 5% குறைவாகவும் பெறப்பட்டுள்ளதால், மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண்.4503/2018/இ1)</td>
<td>தீர்மான எண்.1057<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.17 | இந்நகராட்சிக்குரிய கீழ்கண்ட குத்தகை இனங்களின் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 24.03.2020 அன்று இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெற இருந்த நிலையில் கொரோனா தொற்று நோய் காரணமாக நாடெங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், 24.03.2020 அன்று நடைபெற இருந்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தள்ளிவைக்கப்பட்டது. மேற்படி கொரோனா தடுப்பு பணியின் காரணமாக நிர்வாக நலன் கருதி தற்காலிகமாக தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட குத்தகை இனங்களின் மீது துறைவாரியான வசூல் செய்யவும், ரசீது புத்தகங்களை அச்சடித்து கொள்ளவும், அதற்கு உரிய பணியாளர்களை நியமித்து வருவாய் ஆய்வர்கள் மூலம் வசூல் பணி கண்காணிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>1. வார சந்தை பேட்டை கட்டண கழிவறை<br>2. பேருந்து நிலைய கட்டண கழிவறை<br>3. காந்தி ரோடு காய்கறி நாளஙகாடி<br>அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று துறைமூலம் வசூல் செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.8204/2017/அ4) | தீர்மான எண்.1058 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.18 | மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள பழைய வெள்ளை நிற வாக்காளர் அடையாள அட்டையினை வண்ண அட்டைகளாக மாற்றியதால், அவற்றினை பார்கோடு மூலம் ஸ்கேன் செய்ய ஏதுவாக இரண்டு ஸ்கேனர் சப்ளை செய்யவும், இரண்டு ஜியோ மோடம் ரீசார்ஜ் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். நாள்.29.02.2020ல் பெறப்பட்டுள்ளது. அதன்படி பொருட்கள் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் 06.03.2020 அன்று கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | தீர்மான எண்.1059 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | விலைப்புள்ளி வழஙகிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை பார் ஸ்கேனர் ஒன்றுக்கு (ரூ) | மோடம் ரீசார்ஜ் தொகை ஒன்றுக்கு (ரூ) | கூடுதல் தொகை ஒன்றுக்கு (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | பெஸ்ட் டெக் கம்ப்யூட்டர்ஸ், மன்னார்குடி. | ரூ.3,450/– | ரூ.251/– | ரூ.3,701/– |
| 2. | காஸ்மிக் பாயிண்ட கம்ப்யூட்டர்ஸ், தஞ்சாவூர் | ரூ.3,400/– | ரூ.251/– | ரூ.3,651/– |
| 3. | எஸ்.கே. மார்கெட்டிஙக சர்வீஸ், தஞ்சாவூர் | ரூ.3,550/– | ரூ.251/– | ரூ.3,801/– |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள காஸ்மிக் பாயிண்ட் கம்ப்யூட்டர்ஸ், தஞ்சாவூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி

| | | |
|---|---|---|
| | கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | |

**(ஒம்) திரு ஆர் திருமலைவாசள்**
**தனி அலுவலர்**
**மன்னார்குடி நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையர்(பொ)**
**மன்னார்குடி நகராட்சி**